பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 07 வெள்ளிக்கிழமை 23.08.2024 கதிர் 289

## தமிழ் பொது வேட்பாளரை நாம் ஆதரிக்கவே இல்லை

### கொழும்பில் சுமந்திரன் நேற்று அறிவிப்பு

தமிழ் பொது வேட்பாளரை நாங்கள் ஆதரிக்கவில்லை. பொதுவேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள அரியநேந்திரனுக்கு எதிராகக் கட்சியில் ஒழுக்காற்று நடவடிக்கையைமுன்னெடுத்துள்ளோம். நாம் குறிப்பிடும் வேட்பாளருக்கே எம்மக்கள் வாக்களிப்பார்கள் என்று இலங்கை தமிழரசுக்கட்சியின்நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின்பேச்சாளருமான சுமந்திரன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு யாருக்கு ஆதரவளிக்கும் ☞ 8

### கட்சி என்ன முடிவெடுத்தாலும் பரவாயில்லை

## அரியநேந்திரனுக்கே எனது முழு ஆதரவு

### சிறீதரன் நேற்று அறிவிப்பு

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்புச் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்பட்டிருக்கும் தமிழும் பொதுவேட்பாளர் அரியநேந்திரனுக்குத் தான் முழு ஆதரவுவழங்குகிறார் என்று நேற்று அறிவித்தார் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன்.

யாழ்ப்பாணத்தில்உள்ள தனது வீட்டுக்கு நேற்றுத் தேடிவந்தஅரியநேந்திரனை வரவேற்று பொன்னாடை போர்த்து மாலை அணிவித்துக் மதிப்பளித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதியாக எனது ஆதரவு அரியநேத்திரனுக்குஅளிக்கப்படும். தமிழ் மக்கள் காத்திரமான ஒரு செய்தியை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வழங்க வேண்டும்.இலங்கை ☞ 8

## இது ரகசியம் அல்ல!

வருங்காலஜனாதிபதியான (தன் வீட்டுக்கு வந்த அரியநேந்திரனை சிறீதரன் அப்படித்தான் வரவேற்றார்) தமிழ்பொது வேட்பாளருக்கு ஆதரவு திரட்ட ஒரு வழியாக பாதிப் பொதுக் கட்டமைப்பின் புறப்பட்டுவிட்டனர். பொலி கண்டி முதல் பொத்துவில் வரை என்று வடக்கு கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களுக்கும் சென்று ஆதரவு திரட்டுவது இந்த பரப்புரைப் பயணத்தின் நோக்கம் என்றுநேற்றுபொதுக்கட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் அறிவித்தனர்.

அப்படித் தன் பரப்புரைப் பயணத்தைத் தொடங்குவதற்கு முன்னர், தன்னை வழிகாட்டி பொது வேட்பாளர் என்ற இடத்திற்குக் கொண்டு சென்ற குருநாதரான சிறீதரனிடம் ஆசி பெறவேண்டி அவரது வீடு தேடிச் சென்றிருந்தார் போலும் அரியநேந்திரன். அவருக்கு பொன்னாடை மாலை என்று மரியாதை செய்த சிறீதரன் தனது முழு ஆதரவும் தரப்படும் என்றும் அறிவித்தார்.

அங்கு வைத்து பொது வேட்பாளருக்கான சங்குச் சின்னத்தைத் தெரிவு செய்யுமாறே சிறீதரன் தான்தன்னைவழிப்படுத்தினார் ☞ 2

### உள்ளாட்சி தேர்தலை நிறுத்தியமைக்கு ஜனாதிபதியே முழுப் பொறுப்பு

# வாக்குரிமையை மீறிய ரணில் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்

### பரப்புரைக் கூட்டத்தில் சஜித் சூளுரை



உள்ளூராட்சி சபைத்தேர்தலை நிறுத்தி மக்களின் வாக்குரிமையை மீறிய ஜனாதிபதிரணில் விக்கிர மசிங்க மீது ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்க் ☞ 2



## ஹெகலியவின் மறியல் நீடிப்பு

*முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலியரம்புக்வெல்ல உட்பட நால்வரின் விளக்கமறியல் ஓகஸ்ட் 29 வரை நீடிக்கப்பட்டுள்ளது. மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றம் நேற்று இதற்கான உத்தரவை வழங்கியது.*

*சந்தேக நபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோதுநீதிவான் விளக்கமறியல் நீடிப்பு உத்தரவை வழங்கினார்.*

*தரமற்ற இமியூனோகுளோபுளின் தடுப்பூசிகளை இறக்குமதிசெய்தகுற்றச்சாட்டின் பேரில் முன்னாள் சுகாதார அமைச்சர்கெஹலியரம்புக்வெல்ல பெப்ரவரி மாதம் 2 முதல் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.*

## ரணில் ஐ.தே.க. வேட்பாளரேதான் சுயேச்சைப் போட்டியாளர் அல்லர்

### பொது ஜன பெரமுன செயலாளர் தெரிவிப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில்தான் போட்டியிடுகிறார், அவர் சுயேச்சை வேட்பாளர் அல்லர் என்பதை நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அதுகோரலவின்கூற்றின் ஊடாக விளங்கிக் கொள்ள முடிகிறது என்று தெரிவித்தார் பொது ஜன பெரமுனவின் பொதுச் செயலர் சாகர காரியவாசம்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை விசேட கூற்று ஒன்றை முன் வைத்த பின்னர் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்துவெளியேறினார் தலதாஅத்துக்கோறளை. அப்போது அவர் குறிப் பிட்ட கருத்தை மேற்கோள்காட்டியே சாகர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

நிமல் சிறிபால டி சில்வா, பிரசன்ன ரணதுங்க ஆகியோரை ஊழல்வாதிகள் என்று விமர்சித்த தலதா அதுகோரல அந்த அணியின் பக்கம் செல்லவுள்ளமை அருவருப்பானதுஎன்றும் அவர் குறிப்பிட்டார்.

கட்சி அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது ☞ 2

## அலிசாஹிர் மௌலானாவிடம் விளக்கம் கேட்கின்றது மு.கா.

முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா கட்சி தாவி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆதரவு தெரிவித்தமைக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்கப்படும். அதேநேரம் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் கட்சிக்குத் திரும்ப விரும்புகின்றார் என்று அறிவித்துள்ளார் கட்சியின்தலைவர்ரவூப் ஹக்கீம்.

கொழும்பில் செய்தியாளர்களிடம்அவர் ☞ 8

## தேர்தலை ஒத்திவைத்ததால் ரணிலுக்கு வருத்தமில்லை

### பரப்புரைக் கூட்டத்தில் நேற்று அவரே தெரிவிப்பு

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்காக இரண்டரை மாதங்களைச்செலவிட்டிருந்திருந்தால் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரமடையச் செய்திருக்கமுடியாது. அதனால் தேர்தலைப் ஒத்திவைத்ததில் எனக்கு எந்தவருத்தமும்இல்லை என்று தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

மஹரகம ☞ 2

### எல்லோரும் விட்டுவிட்டு ஓடிவிடுவார்கள் என்பதால்

## தேர்தலில் போட்டியிடுவதை சஜித் பரிசீலனை செய்வாரா?

### மனுஷ நாணக்கார எள்ளல்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியின் பின் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள்எம்முடன் இணைவார்கள். எனவே சஜித்பிரேமதாசதேர்தலில் போட்டியிடுவதைமீள்பரிசீலனை செய்வாரா? எமக்குத்தெரியவில்லை. அதற்குள் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கட்சியின்ஏனைய உறுப்பினர்களும் வெளியேறி விடுவார்கள் என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர்மனுஷநாணயக்கார தெரிவித்தார்.

இராஜாங்கஅமைச்சர் வடிவேல் ☞ 2

## ஜனாதிபதி வேட்பாளர் மாரடைப்பால் இறப்பு

வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளரானமுன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர் மருத்துவர் ஐதுரூஸ் இல்லியாஸ் நேற்றுத் திடீரெனக் காலமானார்.

சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் காலத்தில்நாடாளுமன்ற உறுப்பினராகக் கடமையாற்றிய ஐதுரூஸ் இல்லியாஸ்புத்தளத்தைச் சேர்ந்தவர். இறக்கும் போது அவருக்கு ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

என்ற உண்மையைப் போட்டுடைத்தார் அரியநேந்திரன். ஆக மொத்தத்தில் சின்னத்தைத் தெரிவு செய்வதில்கூட பொதுக் கட்டமைப்பினருக்கு எந்தப் பங்கும் இருந்ததாகத் தெரியவில்லை. சங்கு முழங்கினாலும் சரி அரியநேந்திரனுக்கும் பொதுக் கட்டமைப்புக்கும் சங்கூதினாலும் சரி எல்லாம் சிறிதரனுக்கே சொந்தம் போலும்....

பொது வேட்பாளராக வருபவரோடு ஒப்பந்தம் போடுவோம், அவர் எந்தக் கட்சி சார்பில் தேர்தலில் நிற்கிறாரோ அவரோடும் ஒப்பந்தம் போடுவோம் என்றெல்லாம் பெரும் அறிக்கைகள் விட்ட பொதுக் கட்டமைப்பினர் இப்போது அது பற்றி மூச்சும் விடக்காணோம்.

அரியநேந்திரனுடன் அவர்கள் எந்த ஒப்பந்தத்தையும் செய்துகொண்டார்கள் என்ற பகிரங்க அறிவிப்புக்கள் எவையும் வரவில்லை. இன்று பரப்புரைப் பயணத்தை தொடங்குகிறார்கள் என்றாலும் அப்படிப்பட்ட ஒப்பந்தம் எதுவும் செய்யப்பட்டதாகவும் தகவல் இல்லை. ஒட்டுமொத்ததில் தவறுகளில் இருந்து பாடம் கற்றுக்கொண்டோம் என்று சொன்னவர்களால் புதிய பாடம் எதனையும் சொல்ல முடியவில்லை என்பதுதான் உண்மை. ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது என்பதை நிரூபித்திருக்கிறார்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வாக்குரிமையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சித் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

''உள்ளூராட்சித் தேர்தலை நடத்தத் தவறியமை மக்களின் அடிப்படை உரிமையை மீறும் செயல் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்தத் தன்னிச்சையான, தான்தோன்றித்தனமான தீர்மானத்திற்கு ஜனாதிபதியே பொறுப்புக் கூறவேண்டும். நிதி அமைச்சராக அவர் மக்களின் அடிப்படை உரிமையை மீறி இருக்கிறார் என்று நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. மக்களின் அடிப்படை உரிமையை மீறிய ஒருவராகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் களம் இறங்கி இருக்கிறார். மக்களின் வாக்குரிமையை மீறிச் செயற்பட்டிருக்கும் இவர்கள் எதிர்காலத்தில் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்" என்றார் அவர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஒன்பதாவது மக்கள் பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் மொறட்டுவை சொய்சாபுர விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்றது. இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி உள்ளிட்ட ஆளும் தரப்பினர் தமது சுய இலாபத்திற்காக வங்கரோத்து அடைந்த நாட்டில் தேசிய வளங்களையும் சொத்துக்களையும் முறையற்ற விதத்தில் பயன்படுத்துகின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க வேண்டியவைகளை புறக்கணித்து மக்களுக்கு விரோதமான முறையில் அரச நிர்வாகம் ஒன்றை தற்போது முன்னெடுக்கின்றனர்.

நான் என்கின்ற மமதையுடன் ஆட்சி யுகம் ஒன்றை ஏற்படுத்தி தனது அதிகாரத்தை பாதுகாத்துக் கொள்வதற்காக அதிகபட்ச தந்திரங்களை பயன்படுத்தி, அரசியல் யாப்பு விதிமுறைகளை மீறி, நிறைவேற்று அதிகாரத்தை தான்தோன்றித்தனமாக பாவித்து அவர்களுடைய அரசியல் ஆயுட்காலத்தை நீடித்துக் கொள்வதற்காக முயற்சிகளை மேற்கொள்கின்ற இந்த இருண்ட யுகத்தை தோல்வி அடையச்செய்து, பொதுமக்களுக்கான யுகத்தை நோக்கி செல்வதற்கு மக்கள் அனைவரும் ஒன்றிணையவேண்டும்.

இந்த அரசியலில் தலைகள் இடம் மாறிக் கொண்டிருக்கின்றன. பணத்துக்காகவும், தரகுத் தொகைகளுக்காகவும், சலுகைகளுக்காகவும், வரப்பிரசாதங்களுக்காகவும், சாராயக் கடைகளுக்காகவும் தமது சுய கௌரவத்தை இழக்கின்ற ஓர் அரசியல் கலாசாரம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் நாம் எடுத்திருக்கின்ற தீர்மானம் குறித்து மகிழ்ச்சி அடைகின்றேன். அதிலும் பல அழுத்தங்களும் கோரிக்கைகளும் வந்தாலும் திருடர்களோடு அல்லாமல் 220 இலட்சம் மக்களோடு ஒன்றாக இருப்பதற்கு நாமும், ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களும் தீர்மானித்திருந்தோம். நாம் எடுத்த தீர்மானம் சரியானது என்று இன்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்ற தேர்தலை நிறுத்துவதற்கு ஆளும்தரப்பு மேற்கொண்ட முயற்சி மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுகின்ற செயற்பாடு என உயர் நீதிமன்ற தலைமை நீதியரசர் உட்பட ஐவர் அடங்கிய நீதிபதிகள் ஆயம் வழங்கியுள்ள தீர்ப்பு சுட்டிக் காட்டுகின்றது. இந்த தன்னிச்சையான தான்தோன்றித்தனமான தீர்மானத்திற்கு ஜனாதிபதியே பொறுப்பு கூறவேண்டும்.

நிதி அமைச்சராக அவர் மக்களின் அடிப்படை உரிமையை மீறி இருக்கிறார் என்று நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. இந்த உயரிய சட்டத்தை மீறுகின்ற நாடானது ஏல நிலமாக மாற்றுகின்ற ஆட்சியாளர்களோடு ஒன்றாக இருக்க முடியாது.

இன்னும் சில தினங்களில் பொது மக்களின் யுகத்தை ஐக்கிய மக்கள் சக்தி உருவாக்கும். மக்களின் அடிப்படை உரிமையை மீறிய ஒருவராகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் களம் இறங்கி இருக்கிறார். மக்களின் வாக்குரிமையை மீறிச் செயற்பட்டிருக்கும் இவர்கள் எதிர்காலத்தில் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்.

அவர்கள் இந்த நாட்டு மக்களுக்கு நட்டஈடு வழங்க வேண்டும். நாட்டை சீரழித்த மக்களை ஏமாற்றியுள்ள மோசடிக்காரர்களின் ஆதரவோடு நியமிக்கப்பட்ட ஜனாதிபதியையும், இந்த ஆட்சியையும் நிராகரித்து மக்களின் துன்ப துயரங்களை உணருகின்ற ஆட்சி ஒன்றை கொண்டுவருவதற்கு ஒன்றிணையுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன்.

220 இலட்சம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் தேசியக் கொள்கை ஒன்று முன்னெடுக்கப்படும். ஜனாதிபதி நடமாடும் சேவை ஒன்றும் ஆரம்பிக்கப்படும். இந்த நாட்டில் பெரும்பான்மையானோர் வாழ்க்கைப் போராட்டத்தை எதிர்கொண்டுள்ளார்கள். நான் ஜனாதிபதி ஆனவுடன் ஜனநாயகத்துடன் கூடிய வளமான நாடொன்றை கட்டி எழுப்ப நடவடிக்கை எடுப்பேன் - என்றார்.

## ரணில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முதலாவது தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தை புதன்கிழமை அநுராதபுரம் நகரில் நடத்தினோம். இந்த கூட்டத்தில் அநுராதபுர மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் எவரும் கலந்துக் கொள்ளவில்லை. இருப்பினும் அநுராதபுர மாவட்ட மக்கள் பெருமளவில் கலந்துக் கொண்டார்கள்.

தேசியத்தைக் காட்டிக் கொடுத்து சந்தர்ப்பவாத அரசியலில் ஈடுபடுபவர்களை மீண்டும் கட்சியில் இணைத்துக்கொள்ள வேண்டாம் என்று அநுராதபுர மாவட்ட மக்கள் அழுத்தமாக வலியுறுத்தினார்கள். எவர் எங்களை விட்டுச் சென்றாலும் மக்கள் எம்முடன் உள்ளார்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயாதீன வேட்பாளராகப் போட்டியிடவில்லை. அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் என்ற அடிப்படையில்தான் தேர்தலில் போட்டியிடுகிறார் என்பதை ஆரம்பத்தில் இருந்து திட்டவட்டமாக குறிப்பிட்டோம். நாங்கள் குறிப்பிட்டதை இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அதுகோரல உறுதிப்படுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அதுகோரல புதன்கிழமை (21) பாராளுமன்றத்தில் விசேட உரையாற்றி, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், கட்சியின் பிரதித்தலைவரும் இருமுனைகளில் தேர்தலில் போட்டியிடுவதால் தனக்கு அரசியல் தீர்மானத்தை எடுக்க முடியவில்லை. ஆகவே தான் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகுகின்றேன் என்று அறிவித்தார்.

ரணில் சுயாதீன வேட்பாளராக போட்டியிடுவதாக இருந்தால் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலகவேண்டும். ஆனால் ஜனாதிபதி கட்சியின் தலைவர் பதவியில் இருந்தபடியே சுயேச்சையாகப் போட்டியிடுவதாக குறிப்பிட்டுக் கொள்கிறார். எமது தரப்பினரும் அதை நம்பி அவருக்கு ஆதரவு வழங்கச் சென்றுள்ளார்கள்.

பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களை மோசடியாளர்கள், ஊழல்வாதிகள் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டினார்கள். ஆனால் இன்று அவர்களை இணைத்துக் கொண்டுள்ளார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அதுகோரல அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, பிரசன்ன ரணதுங்க ஆகியோரை கடுமையாக விமர்சித்தார். ஆனால் இன்று அவர்கள் இருக்கும் அணியின் பக்கம் அருவருப்பு இல்லாமல் செல்லவுள்ளார். இவ்வாறானவர்களுக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் என்றார்.

## தேர்தலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுரேஷின் பதவியேற்பு நிகழ்வில் நேற்றுக் கலந்துகொண்டபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்தில் தலதா அத்துகோரள ஆற்றிய உரையானது சமகி ஐக்கிய மக்கள் சக்தியின் அடிமட்ட உறுப்பினர்கள் மத்தியில் எதிரொலிக்கும். அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரைச் சுற்றி திரளுவதற்கு அவர்களைத் தூண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கிராம மட்ட உறுப்பினர்கள் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்தவர்கள். ஆகவே தமது தலைவர் நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் திட்டமிட்டு செயற்படுகின்றதால், தங்களது ஆதரவை அவருக்கு வழங்க மக்கள் தயாராக உள்ளனர்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி, தேவையான அறிவுறுத்தல்களையும் வழிகாட்டுதல்களையும் தொழில் அமைச்சுக்கு வழங்கிவருகின்றார். எனவே, திட்டமிட்டபடி அமைச்சின் அனைத்து பணிகளும் தொடரும்.

தொழில் இராஜாங்க அமைச்சர் என்ற வகையில் வடிவேல் சுரேஷ் தொழிலாளர் துறை, முறைசாரா தொழிற்துறை தொழிலாளர்களின் ஓய்வூதியம், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பான பிரச்சனைகளையும் முன்னெடுத்து வருகின்றார்.

நாடாளுமன்றத்தில் தலதா அத்துகோரல ஆற்றிய உரையில் சஜித் பிரேமதாசவின் அனுபவமின்மை, ஜனாதிபதியாக வருவதற்கான அவரது பொறுமையின்மை மற்றும் பொறுப்புகள் அவருக்கு வழங்கப்பட்டபோது அதனை ஏற்க மறுத்தமை பற்றிய விடயங்களை நாம் முன்னேரே கூறிவிட்டோம் .

தலதாவின் நாடாளுமன்ற விசேட உரையின் பின்னர் சஜித் பிரேமதாச தலைமை தாங்கும் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியை பற்றி சிந்திக்கத் தூண்டுகிறது. எதிகட்ச்சித்தலைவரிடம் முறையான அபிவிருத்தி வேலைத்திட்டம் எதுவும் இல்லை. அவர் எல்லோரையும் சமநிலைப்படுத்த முயல்கிறார். அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்காக எதையும் செய்யும் ஒருவராக சஜித்தை நாம் அறிந்து கொண்டோம்.

அதிகாரத்திற்காக எதையும் செய்யும் தலைவர்கள் எங்களுக்குத் தேவை இல்லை. மாறாக நாட்டையும் அதன் எதிர்காலத்திற்காக முன்னோக்கி நகர்த்துவதற்கு தேவையான அனைத்தையும் செய்யும் தலைவர் ஒருவரே எமக்குத் தேவைப்படுகின்றார். செப்டெம்பர் 21 தேர்தலில், சிலர் ஏற்கனவே வெற்றி பெற்றுவிட்டதாக நம்புகின்றனர். எது எவ்வாறாயினும் எமது வெற்றியை உறுதி செய்வோம்.

எமது வெற்றியின் பின் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்முடன் இணைவார்கள். இந்நிலையில் சஜித் பிரேமதாச தேர்தலில் போட்டியிடுவதை மீள்பரிசீலிப்பாரா என்பது எமக்குத் தெரியவில்லை. அதற்குள் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கட்சியின் ஏனைய உறுப்பினர்களும் வெளியேறி விடுவார்கள் - என தெரிவித்தார்.

## தேர்தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர் சேவை மன்றக் கேட்போர் கூடத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற புதிய மக்கள் முன்னணியின் தேசிய மாநாட்டில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அரசியல் ரீதியாக நாம் இப்போது புதிய சகாப்தத்தில் நுழைந்துள்ளோம். அந்த சகாப்தம் எங்கள் அணியால் உருவாக்கப்பட்டது. இந்த நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தபோது பாரம்பரிய தலைவர்கள் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முன்வரவில்லை. ஆனால் எமது குழு ஓரணியில் திரண்டு அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது.

அப்போது எங்கள் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்தது. ரூபாயின் பெறுமதி சரிந்திருந்தது. ஆனால், பொருளாதாரத்தை மறுசீரமைத்து, ரூபாயைப் பலப்படுத்தி, நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தியுள்ளோம். கடந்த இரண்டு வருடங்களில் நாட்டின் பொருளாதாரம் வலுவாக உள்ளது. வரும் ஆண்டிலும் அது வலுவாக இருக்கும் என நம்புகிறோம். பொருளாதார வளர்ச்சியை இலக்காக கொண்டு, நாம் முன்னேற வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை மீறினால் பணம் கிடைக்காது. அந்த நிபந்தனைகளை மறுபரிசீலனை செய்வது என்பது தற்போதைய நிலைமைகளை

தொடர்ச்சி 8ம் பக்கம்....




# மோதலைத் தூண்டும் முக்கிய காரணியாக காணிகள் போரின் பின்னராக இலங்கையில் பிரச்சினை இதுவே

## மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் தெரிவிப்பு

யுத்தம் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டதன் பின்னரான இலங்கையில் மோதலுக்குத் தூண்டுதலளிக்கும் மிகமுக்கிய காரணியாகக் காணிப்பிரச்சினை காணப்படுவதாகவும், இதற்கு உடனடியாகத் தீர்வுகாணத்தவறும் பட்சத்தில் இனங்களுக்கு இடையிலான மோதல்கள் தீவிரமடைவதுடன், நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளில் பாரிய பின்னடைவு ஏற்படும் என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எச்சரித்துள்ளது.

நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதிகரித்துவரும் நில அபகரிப்புக்கள் மற்றும் அவை அப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கும் தாக்கங்கள் பற்றி விரிவான விளக்கத்தையும், இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முன்னெடுக்கப்படவேண்டிய பரிந்துரைகளையும் உள்ளடக்கி மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தால் 'இலங்கையில் காணிப்பிரச்சினையின் குறுக்குவெட்டு (ஒன்றுக்கொன்று தொடர்புடைய) போக்கு' எனும் தலைப்பில் 95 பக்க அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

'இலங்கையில் யுத்தம் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டு 15 வருடங்களின் பின்னரும் இனங்களுக்கு இடையிலான பிளவுகள்தொடர்வதுடன், யுத்தத்துக்கானஅடிப்படைக்காரணிகள் இன்னமும் களையப்படவில்லை. அதன் ஓரங்கமாக பல தசாப்தகாலகாணிப்பிரச்சினையுத்தத்தின்பின்னரும்தொடரும் அதேவேளை, இவ்விடயத்தில் பல்வேறு வழிமுறைகளில் நிகழும் அரச தலையீடுகள் நல்லிணக்க செயன்முறையில் பின்னடைவை ஏற்படுத்தக்கூடியவாறான பிளவுகளைத் தோற்றுவித்துள்ளன.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக வட, கிழக்கு மாகாணங்களில் அதிகாரங்களில் சமத்துவமற்ற நிலையைத் தோற்றுவிப்பதற்குகாணிகள்பயன்படுத்தப்பட்டுவந்திருப்பதுடன், தற்போது இப்பகுதிகளில் மேலோங்கிவரும் 'ஊடுருவல் போக்கு' அப்பகுதி மக்களிடையே அச்சத்தை விதைத்திருக்கிறது' என மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் பதிவாகி, தற்போதும் தொடர்ந்துவரும் காணிப்பிரச்சினைகள் குறித்து தனித்தனியாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

மேலும், இவ்வறிக்கையில் விபரிக்கப்பட்டிருக்கும் காணிப்பிரச்சினைகளை அடிப்படையாகக்கொண்டு நோக்குகையில், அதன் பின்னணியில் பரந்துபட்ட அளவிலான சட்ட மற்றும் கொள்கைசார் கரிசனைகள் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டியுள்ள மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், ஆட்சியியல் நிர்வாக மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளல், மோதலுக்குத் தூண்டுதலளிக்கும் காரணிகளைக் களைதல், அவசியமான சட்ட மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளல், காணி அபகரிப்புக்களால் எதிர்மறையான பாதிப்புக்களுக்கு உள்ளானோருக்கு உரியவாறான இழப்பீட்டை வழங்கல் ஆகிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் எனப் பரிந்துரைத்துள்ளது.

(05)

# இரு குழுக்களுக்கிடையில் மோதல்; இருவர் வைத்தியசாலையில் சேர்ப்பு

### லுணுகலையில் சம்பவம்

லுணுகலை கல்லு குதத்தை ஏலத்தில் பெற வந்த இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் இருவர் லுணுகலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என லுணுகலை பொலிஸார் தெரிவித்தனர்.

லுணுகலை நகரில் உள்ள கல்லு குதம் நேற்று ஏலத்தில் விடப்பட இருந்த நிலையில் குருணாகலை மற்றும் பதுளை பகுதியில் உள்ள இரண்டு குழுக்கள் குறித்த கல்லு குதத்தை ஏலத்தில் பெறுவதற்கு முற்பட்ட போது இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறியுள் ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் வாகனம் ஒன்றின் பின்பகுதியில் உள்ள கண்ணாடி அடித்து சேதமாக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்த இருவர் லுணுகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதுடன் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை லுணுகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# மனித அபிவிருத்திச் சுட்டெண்ணின் பிரகாரம் 193 நாடுகளில் 78ஆவது இடத்தில் இலங்கை

சர்வதேச செஞ்சிலுவை, செம்பிறைச்சங்கங்களின்சம்மேளனத்தினால் வெளியிடப்பட்டுள்ள வருடாந்த அறிக்கையின் பிரகாரம் இலங்கையானது 0.782 என்ற மனித அபிவிருத்திச் சுட்டெணுடன் 193 நாடுகளின் பட்டியலில் 78 ஆவது இடத்தில் இருக்கின்றது.

கடந்த 2019 ஆம் ஆண்டு இலங்கை உயர் - நடுத்தர வருமானம்பெறும்நாடு எனும் நிலையை அடைந்திருந்த போதிலும், 2020 ஆம் ஆண்டு மீண்டும் குறைந்த - நடுத்தர வருமானம் பெறும் நாடு எனும் நிலைக்குக் கீழிறங்கியது. இருப்பினும் 2023 ஆம் ஆண்டுக்கான மனித அபிவிருத்திச் சுட்டெண் பிரகாரம் 193 நாடுகளில் இலங்கை 78 ஆவது இடத்தைப் பிடித்திருக்கிறது. இலங்கை உயர்வான மனித அபிவிருத்தியைக் கொண்டிருக்கிறது என்பதே இதன் அர்த்தமாகும்.

'உயர் பணவீக்கம், ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி, உணவுப் பாதுகாப்பின்மை, எரிபொருள் மற்றும் அத்தியாவசியப்பொருட்களுக்கான தட்டுப்பாடு உள்ளடங்கலாக தீவிர பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களுக்கு இலங்கை முகங்கொடுத்தது. அவ்வேளையில் நடைமுறைப்படுத்தப்பட்ட சேதன உரக்கொள்கையின் தோல்வியை அடுத்து நெருக்கடி மேலும் தீவிரமடைந்ததுடன், உள்நாட்டு விவசாய உற்பத்தி கணிசமான அளவினால் வீழ்ச்சியடைந்தது' என சர்வதேச செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை 2022 இல் எழுச்சியுற்ற மக்கள் போராட்டம் பின்னர் தணிந்த போதிலும், மின் கட்டண உயர்வு மற்றும் வரி அதிகரிப்பு போன்ற காரணங்களுக்காக 2023 ஆம் ஆண்டிலும் அடிக்கடி ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் நடத்தப்பட்டதாகவும், அக்காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க சில முன்னேற்றங்களைத் தவிர பணவீக்கம் மற்றும் வெளிநாட்டுக்கடன் என்பன மிகவும் உயர்வான மட்டத்தில் காணப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# 35 நாட்டவர்களுக்கு இனி வீஸா இலவசம்



35 நாடுகளின் குடிமக்களுக்கு இலவச விசா வசதியின் கீழ் நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, ஜெர்மனி, ஆஸ்திரேலியா, சவூதி அரேபியா, சீனா, இந்தியா, ரஷ்யா, தென் கொரியா, ஜப்பான் உள்ளிட்ட 35 நாடுகள் இதில் சேர்ந்துள்ளன.

ஒக்ரோபர் 1, 2024 முதல் 06 மாத காலத்திற்கு இந்த வாய்ப்பு கிடைக்கும்.

நாடுகளின் விபரங்கள் கீழே உள்ளன

ஐக்கிய இராச்சியம், ஜெர்மனி, நெதர்லாந்து, பெல்ஜியம், ஸ்பெயின், ஆஸ்திரேலியா, டென்மார்க், போலந்து, கசகஸ்தான், சவூதி அரேபியா,. ஐக்கிய அரபு எமிரேட்ஸ், நேபாளம், சீனா, இந்தியா, இந்தோனேஷியா, ரஷ்யா, தாய்லாந்து, மலேஷியா, ஜப்பான், பிரான்ஸ், அமெரிக்கா, கனடா, செக் குடியரசு, இத்தாலி, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா, இஸ்ரேல், பெலாரஸ், ஈரான், சுவீடன், தென் கொரியா, கத்தார், ஓமன், பஹ்ரைன், நியூஸிலாந்து.

(05)

# வெளிநாடுகளின் தூதுவர்கள் நற்சான்றிதழ்கள் கையளிப்பு







இலங்கைக்கு புதிதாக நியமிக்கப் பட்டுள்ள மூன்று தூதுவர்கள் மற்றும் இரண்டு உயர்ஸ்தானிகர்கள் புதன்கிழமை கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் தமது நற்சான்றிதழ்களை கையளித்தனர்.

இன்று நற்சான்றிதழ்களைக் கையளித்த இராஜதந்திரிகளின் பட்டியல் பின்வருமாறு

1. டயானா மெக்கிவிசீன் - தூதுவர் - லிதுவேனியா குடியரசு
2. டிரின் தி டாம் - தூதுவர் - வியட்நாம் சோசலிசக் குடியரசு
3. மாலர் தன் டைக் - தூதுவர் - மியான்மார்
4. பெர்சி பெட்சன் சந்தா - உயர்ஸ்தானிகர் - சிம்பாப்வே
5. அண்டலிப் எலியாஸ் - உயர்ஸ்தானிகர் - பங்களாதேஷ்

நற்சான்றிதழ்களை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, புதிய தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களுடன் சிநேகபூர்வ உரையாடலிலும் ஈடுபட்டார்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் மற்றும் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல் யாப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அலி சப்ரி, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## விலகவேண்டும் ரணில்

**உள்ளூராட்சி சபைத் தேர்தலை அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சராகத் தன்னிச்சையாக ஒத்திவைத்தமை மக்களின் அடிப்படை உரிமையை மீறும் செயல் என்று உயர் நீதிமன்றம் தீர்பளித்துள்ளது. எனவே முடிந்த விரைவில் தேர்தலை நடத்தும்படியும் அது தேர்தல் ஆணைக்குழுவிற்குக் அறிவுறுத்தலும் வழங்கியுள்ளது.**

**நிதிஅமைச்சரானஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க தேர்தலை நடத்த நிதி இல்லை என்று தெரிவித்து உள்ளூராட்சித் தேர்தல் நடக்கமுடியாத நிலையை ஏற்படுத்தினார். தேர்தல்ஆணைக்குழுதேர்தலுக்கான நாளை அறிவித்து, வேட்புமனுக்களைக் கோரிய பின்னர், வாக்குச்சீட்டுக்கள்அச்சடிக்கப்படவேண்டிய தருணத்தில் நிதி இல்லை என்பதைக் காரணமாகக் காட்டிதேர்தல்நடக்கமுடியாதநிலையைஏற்படுத்தினார் ரணில் விக்கிரமசிங்க.**

**நாட்டின் பொருளாதார நிலை காரணமாக நிதி இல்லாத காரணத்தாலேயே தேர்தலை நடத்த நிதி ஒதுக்க முடியவில்லை என்று அவர் தெரிவித்தார். உள்ளூராட்சித் தேர்தலுக்கு என்று நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தபோதும், தேர்தலுக்கு நிதியை வழங்க முடியாது என்கிற நிலைப்பாட்டை அரசுத் தலைவர் எடுத்தார். அதன் பின்னர்அரசுத்தலைவர்தேர்தலைநடத்துவதற்குநிதி ஒதுக்கப்பட்டது. இதுகுறித்துக்எதிர்க்கட்சிகள்கேள்வி எழுப்பியபோதெல்லாம் நிதி இல்லை அதனால்தான் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முடியவில்லை என்று தெரிவித்து வந்த ரணில், நேற்று நீதிமன்றத் தீர்ப்பு வந்ததுமே, உள்ளூராட்சித் தேர்தலுக்காக இரண்டரை மாதங்களைச் செலவிட்டிருந்தால் நாட்டின் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்தியிருக்க முடியாது என்று விளக்கமளிக்கிறார்.**

**பொருளாதாரநெருக்கடியில்இருந்துஇலங்கையை மீட்பதற்கானபணிக்குஇடைஞ்சலாகஇருக்கும்என்ற காரணத்திற்காகத்தான்தேர்தலைஒத்திவைத்ததாக ரணில் இப்போது ஒரு புதுக் கதையை உருவாக்கப் பார்க்கிறார். ஆக மொத்தத்தில் அவர் தனது தோல்விப் பயம் காரணமாகவே உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைத்தார் என்று எதிர்க் கட்சிகள் சுமத்திய குற்றச்சாட்டில் உண்மை இருக்கத்தான் செய்கிறது.**

**மக்களின் அடிப்படை உரிமையை மீறி அவர்களின் வாக்குரிமையைப் பறித்ததன் மூலம் நீதிமன்றத்தின் முன்ஒருகுற்றவாளியாகநிற்கும்ரணில்விக்கிரமசிங்க அதற்கான தார்மீகப் பொறுப்பேற்று ஜனாதிபதித் தேர்தலில் இருந்தே விலகிக்கொள்ள வேண்டும். உள்ளூராட்சித் தேர்தல் விடயத்தில் அவரை மட்டுமே நீதிமன்றம் குற்றவாளியாகக் கண்டிருக்கின்றது. எனவே மக்களின் அடிப்படை உரிமைகளை மீறியமைக்காக அரசுத் தலைவர் பதவி நீங்குவதே முறையானது. தற்போது தேர்தல் கால காபந்துப் பதவியில் அவர் இருப்பதால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து அவர் விலகிக் கொள்வதே சிறந்தது.**

# யார் துரோகி?

என். சத்திய மூர்த்தி

கடந்த சில தசாப்தங்களாகவே, தமிழர் சமூக பரப்பில் குறிப்பிட்ட சிலரின் அரசியல் வழிமுறைகள் மற்றும்நெறிமுறைகளைஏற்றுக்கொள்ளாதவர்களின் மேல்'துரோகி' பட்டம் கட்டுவது வழமையான விடயம். விடுதலை புலிகள் அமைப்பு அபரிமிதமான பலம் பெற்றிருந்த காலகட்டத்தில், அவ்வாறு துரோகி பட்டம் கட்டப்பட்டவர்கள், தெளிவாக்கப்படாத அவர்களது தாரக மந்திரத்திற்கு காவு கொடுக்கப்பட்டனர்.

வரை எங்கே என்று தெரியாமலே போயிருந்த சில சமூக வலைதள ஆர்வலர்கள், அவரை கன்னாபின்னாஎன்றுதிட்டித்தீர்த்துவருகிறார்கள்.

ஏதோ, இவர்கள்தான் தமிழ் அரசு கட்சியை கடந்த காலங்களில் கட்டிகாத்து வந்தது போலவும், அரியநேத்திரன்வகையாறாக்கள்அந்தகட்டுப்பாட்டை குலைத்துவிட்டதுபோலவும்ஒருபிம்பத்தைஉருவாக் குகிறார்கள். இந்த விவாதத்தில், அரியநேத்திரனை கணவனுடன் வாழும் குலப்பெண் ஒருத்தி சோரம் போய்விட்ட அளவிற்கு ஒப்பிட்டு விமர்சிக்கிறார்கள்.



ஆல்பிரட் துரையப்பா தொடக்கம், மிதவாத தலைவர்களான அமிர்தலிங்கம, யோகேஸ்வரன், தர்மலிங்கம் போன்றோர், தமிழ் அறிவுஜீவிகளான நீலம் திருச்செல்வம், கேத்தீஷ் லோகநாதன், பிற போராளி குழுக்களின் தலைவர்களான உமா மகேஸ்வரன், பத்மநாபா, ஏன், விடுதலை புலிகள் அமைப்பின் பிரதிதலைவர் என்று கருதப்பட்ட மாத்தையாபோன்றோரும், 'துரோகி' முத்திரை குத்தப்பட்டு, உயிர் எடுக்கபட்டோர் பட்டியலில் அடக்கம்.

ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப் பட்டபோது, கொலையாளிகள், விடுதலை புலிகள் அமைப்பை சேர்ந்தவர்கள் என்று தமிழ் சமூகம் ஏற்றுக்கொண்டது. ஆனால், அந்த அமைப்பில் அரங்கேறிய உள்பூசலுக்குபிறகு, அதன்வடமாகாண தலைமை, கிழக்கு மாகாண துணைதலைமையை 'துரோகி' என்று சித்தரித்தது. அதன் பின்னர், பரராஜசிங்கம்படுகொலைக்கும்அந்த அமைப்பிற்கும் சம்மந்தமே இருக்கவில்லை என்று சாரப்படும்படி இன்றுவரை விவாதிப்பவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். கருணாவும்பிள்ளையானும்'துரோகி' என்று சித்தரிக்கப்பட்ட பின்னர், பரராஜசிங்கம் 'நல்லவர்' தான் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

இந்த சம்பவங்களுக்கு எதிர்மாறாக, கடந்த பதினைந்து ஆண்டுகளாக, எப்போதோ துரோகிப் பட்டம்கட்டப்பட்டவர்கள்உயிருடன்நடமாடமுடிகிறது என்ற ஒரே காரணத்தால், அனைத்து தமிழர்களும் அமைதி பெருமூச்சு விடமுடிகிறது. இதுவே, பெரிய விடயம். என்றாலும், விடுதலை புலிகள் அமைப்பால், அவர்களுடைய காலத்தில் 'துரோகி' பட்டம் கட்டப்பட்டவர்களுக்கு சாபவிமோசனமே கிடையாது. அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா, பிள்ளையான் மற்றும் கருணா போன்றோர் இந்ந பட்டியலில் அடங்குவார்கள். அவர்களை தமிழ் சமூகமும், விடுதலை புலிகள் அமைப்பு விட்டுச்சென்ற அரசியல் அமைப்புகளும்இன்றளவும்ஏற்றுக்கொள்ளவில்லை. ஏன், அவர்களுக்கு இடையேகூட எந்த வித ஒட்டோ, உறவோ கிடையாது.

### பொது வேட்பாளர் சர்ச்சை

இந்த பின்னணியில், பொதுவேட்பாளர் அரியநேத்திரனுக்கு 'துரோகி' பட்டம் கட்டும் சடங்கு, சமூக வலைதளங்களில் அரங்கேறிவருகிறது. தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரான அவர், கட்சி கட்டுப்பாட்டை மீறி, பொதுவேட்பாளராக வலம்வருவது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இது

ஒரு புறம், கடந்த ஞாயிறு அன்று வவுனியாவில் கூடியதமிழ்அரசின்மத்தியகுழு, அரியநேத்திரனுக்கு முன்னரே விளக்கம் கேட்டு அனுப்பபட்ட கடிதம் குறித்தும் விவாதித்தாக அறிய முடிகிறது. அவருக்கு அளிக்கப்பட்டஇரண்டுவாரகாலஅவகாசம்முடிந்ததும், அவர் தமிழ் அரசு கட்சியில் இருந்து விலக்கப்பட்டதாக அறிவிப்பு வரும் என்று எதிர்பார்க்கலாம். ஆனால், தற்போதைய கேள்வி, கட்சி தலைமை அனுப்பிய கடிதத்திற்கு அரியநேத்திரன் பதில் அனுப்புவாரா, என்பதே. அதாவது, தமிழ் தேசிய கட்சிக்கும் அதன் தலைமைக்கும் அவர் இன்னமும் மதிப்பு கொடுத்து பதில் அளிப்பாரா என்பதே கேள்வி.

அவ்வாறு தனக்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கு அரியநேத்திரன் பதில் அளித்தால், அதன் தன்மையும் உள்ளடக்கமும்எவ்வாறாகஇருக்கமுடியும்? தன்னை பொதுவேட்பாளராகநிறுத்தியபொதுகட்டமைப்பினரின் அறிக்கைகளின் சாரத்தில் இருந்து தயாரிக்கப்பட்ட விளக்கமாகவே அந்த கடிதம் இருக்கமுடியும். அந்த கருத்தைதான், தமிழ் அரசு கட்சியின் மத்திய குழு, ஒரு முறைக்கு பலமுறை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது தெரிந்த விடயமாயிற்றே!

### எச்சரிக்கை மணி

அரியநேத்திரனுக்கு அப்பால் சென்று, தமிழ் அரசு கட்சியின் பிற உறுப்பினர்களுக்கும் பொதுவேட்பாளர் பிரச்சினை குறித்து எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. அதாவது, கட்சி உறுப்பினர்கள் யாராவது, பொதுவேட்பாளர் பிரச்சினை குறித்து பொதுவெளியில் கருத்து தெரிவித்தாலோ, அல்லது அவருக்காகத் தேர்தல் பரப்புரை செய்தாலோ, அவர்கள் மீதும் ஒழுங்காற்று நடவடிக்கை பாயும், என்று சாரப்படும்படியான கட்சியின் முடிவை சுமந்திரன் பத்திரிகையாளர்களுக்கு அறிவித்தார்.

இந்த எச்சரிக்கை, முக்கியமாக, கட்சி தலைவராக திருகோணமலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறீதரன் வகையாறாக்களுக்கு பொருந்தும். அதாவது, அவர்கள் ஆற்றில் ஒரு கால், சேற்றில் ஒரு கால் என்று இரட்டை வேடம் போடமுடியாது என்பதே அந்த எச்சரிக்கை. இந்த முடிவை எடுத்த மத்திய குழு கூட்டத்தில் சிறீதரனும் பிரசன்னமாகி இருந்தார், என்று பத்திரிகை செய்திகள் தெரிவிக்கின்றன.

அதாவது, இதுவரை பொதுவேட்பாளர் என்ற கருத்தியலுக்கும், தேர்தலில் போட்டியிடும் அந்த பொதுவேட்பாளருக்கும்ஆதரவாகசிறீதரன்பேசிவந்த

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# யார் துரோகி?

4ம் பக்க தொடர்ச்சி...........

பேச்சுக்களும், முன்னெடுத்த முயற்சிகளும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. இது நாள் வரை, அவர் கட்சி கட்டுப்பாட்டை மீறி செயல்படவில்லை. ஆனால், அவ்வாறான தனது செயல்களை அவர் நிறுத்திக் கொள்ளவிட்டால், அவர் மீதும் ஒழுங்காற்று நடவடிக்கை பாயும் என்பதே அவருக்கு அடிக்கப்பட்ட எச்சரிக்கை மணி. அல்லது, அதன் உள்கரு.

## அடுத்தவர்களின் பாட்டு

தற்போதைய நிகழ்வுகளை வைத்து பார்த்தால், தமிழ் மக்களிடையேயும் அரசியல்வாதிகளுக்கும் இடையே உள்ள பிரச்சினையே, அவர்கள் கூறுவது போல், இனப்பிரச்சினை அல்ல. மாறாக, மீண்டும் மீண்டும், தங்களில் பெரியவர் யார், என்பது குறித்த அவர்களின் பேசப்படாத விவாதம் தொடருகிறது.

உதாரணத்திற்கு, சிறீதரனின் உள்ளேயே ஒரு மனப்போராட்டம் நிகழ்கிறது என்று கருத இடமிருக்கிறது. பொதுவேட்பாளர் என்ற கருத்திற்கு அவரது மனத்தளவில் ஆதரவு தெரிவிக்கிறார் என்பது கண்கூடு. ஆனால், அதனையே, தான் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, தற்போது திரிகோணமலை நீதிமன்றத்தின் முன்னிருக்கும் வழக்கின் முடிவு தெரியும் வரை அவரால் தனது மனம் சொல்லும் முடிவுகளை பொது இடத்தில் பேசிவிடமுடியாது.

அவ்வாறு செய்தால், கட்சியின் ஒழுங்காற்று நடவடிக்கை அவர் மீதும் பாயும் வாய்ப்பு உள்ளது. தமிழ் அரசு கட்சியின் உள்ளே, கொள்கை ரீதியாகவும் தனி நபர் ஏற்புடமை காரணங்களாலும் அவரை எதிர்த்து நேரடியாகவும் மறைமுகமாகவும் அரசியல் செய்வோர் பலர் உள்ளனர். இவர்களில் சுமந்திரன் மட்டுமே, தனது நிலைபாட்டை தைரியமாக தெரியப்படுத்தி உள்ளார். இவர்கள் இருவருக்கும் அப்பால், கட்சி தலைமைக்கு ஆசை போட்டு அசை போட்டவர்களும் இந்த பட்டியலில் அடங்குவார்கள்.

சிறீதரனின் தற்போதைய பிரச்சினையே, நீதிமன்ற வழக்கு முடிவுற்று, அவர் கட்சி தலைமைக்கு பொறுப்பேற்கும் வரை, தன்னை தமிழ் அரசு உறுப்பினராக நிலை நிறுத்திக்கொள்வது தான். அதாவது, தான் கட்சி தலைமை பொறுப்பை ஏற்கும் வரை அடுத்தவர்களின் பாட்டுக்கு ஆட வேண்டிய கட்டாயத்தில் அவரும் இருக்கிறார்.

## தான் பிடித்த முயலுக்கு...

ஆனால், கட்சி தலைவராக பொறுப்பேற்றாலும், சிறீதரனின் பிரச்சினைகள் அத்துடன் முடிந்துவிடப் போவதில்லை. கடந்த சில மாதங்களாக, தமிழ் அரசு கட்சியின் மத்திய குழு, பொதுவேட்பாளர் என்ற கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அதாவது, பொதுவேட்பாளர் என்ற கருத்தியலையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

இன்றோ நாளையோ, கட்சியின் தலைமை பொறுப்பு சிறீதரன் கைவசம் வந்துவிட்டது என்றே வைத்துக்கொள்வோம். அதனால் மட்டும், அவரால், கட்சியின் மத்திய குழுவின் திசையையும் முடிவுகளையும் மாற்றிவிட முடியுமா? தமிழர் அரசியலின் முக்கிய பிரச்சினையே, தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று உறுதியாக தவறிழைப்பதற்காகவே பிறந்த பிரகஸ்பதிகள் தானே? அவர்கள், சிறீதரன் என்ற தனி மனிதருக்குக்காக தங்களுடைய அடிப்படை உணர்வுகளை விட்டுக்கொடுத்து விடுவார்களா, என்ன?

தற்போதைய பொதுவேட்பாளர் குறித்த கருத்தியல் விவாதத்தில், சிறீதரன் பக்கம் கட்சியின் மற்ற மத்திய குழு உறுப்பினர்கள் சாய்ந்துவிடமாட்டார்கள் என்பதே களநிலைமை. அவர்களை பொறுத்தவரையில், தங்களது மிதவாத அரசியல் பண்பை அவர்கள் தங்களது சட்டை பொத்தான்களில் பொருத்திக்கொண்டு, அதனையே பெருமையாக, பெறுபேறாக, கனகாலமாக உலகிற்கு உணர்த்தி வருபவர்கள்.

அவர்களை பொறுத்தவரையில், சிறீதரன் போன்றோர், மிதவாத கருத்தியலை மனமார ஏற்றுக்கொள்ளாதவர்கள். அவரை கட்சிக்குள் உள்வாங்கிக்கொண்டு, அவரை நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுத்து தலைநகர் கொழும்பிற்கு அனுப்பியதே காலத்தின் கட்டாயம். இதுவே, சிறீதரனின் கட்சி சார்ந்த மனநிலையாகவும் இருக்கும் என்று கருதலாம்.

## துர்பாக்கியம்

இந்த வாதிக்கப்படாத, போரிடப்படாத கருத்தியல் விவாதங்கள் ஒருபுறமிருக்க, தந்தை செல்வாவையே ஒரு விவாதப் பொருளாக்கும் சூழ்நிலை உருவாகி உள்ளது துர்பாக்கியமே. பொதுவேட்பாளர் அரியேந்திரன், தந்தை செல்வாவின் சிலைக்கு மரியாதை செய்துவிட்டு தனது பரப்புரைப் பயணத்தைத் தொடக்கினார். இதன் மூலம் தனது அரசியல் நிலைபாட்டிற்கு தந்தை செல்வாவின் ஆசி இருப்பது போன்ற பிம்பத்தை உருவாக்க முயற்சிப்பதாக அவருக்கு எதிராக கருத்தியல் செய்யும் சமூகவலைதள ஆர்வலர்கள் சிலர் குறிப்பிட்டுள்ளார்கள்.

அவர்களில் ஒரு தரப்பினர், இதன் மூலம், அரியேந்திரன், தந்தை செல்வாவினால் தோற்றுவிக்கப்பட்ட தமிழ் அரசு கட்சியும் தனது அரசியல் முன்னெடுப்புகளுக்கு துணைநிற்பது போன்ற தவறான எண்ணத்தை உருவாக்கப் பார்க்கிறார், என்றும் குற்றம் சாட்டியுள்ளனர். இது அரியநேத்திரன் சார்ந்த பிரச்சினை அல்ல. மாறாக, தந்தை செல்வாவின் பெயரை சமூகவலைதள அரசியலினுள் இழுக்க முயற்சிப்பவர்கள் சார்ந்த பிரச்சினை. அரியேந்திரனின் தேர்தல் பரப்புரை கூட்டங்களுக்கு தமிழ் மக்களின் ஆதரவு இல்லை என்பதோடு அவர்கள் நிறுத்திக் கொண்டிருக்கலாம்.

இந்த சமூக வலைதள ஆர்வலர்கள், தந்தை செல்வாவை, அவர் தோற்றுவித்த தமிழ் அரசு கட்சியின் தலைமகன் எனறு மட்டும் கட்டம் கட்டி விடுவதா? அல்லது, அனைத்து தமிழ் மக்களின் அபிலாஷைகளின் உறைவிடம் என்று அவரது நினைவை மேன்மேலும் உயர்த்தி பிடிப்பதா?

இதில் முதலாவதுதான் முடிவு என்றால், தந்தை செல்வாவையும் தங்களில் ஒருவராகவே சித்தரிக்கப் பார்க்கிறார்கள். மாறாக, அவர் அனைத்து தமிழர்களுக்கும் தலைவர் என்றால், அவரது அரசியல் நோக்கு மற்றும் செயல்முறைகளை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கும், அவரது நினைவிற்கு மரியாதை செய்த பின்னரே தங்களது அரசியல் செயல்பாட்டை தொடங்குவதற்கு உரிமை உள்ளது.

இந்த விவாதம் சமூகவலை தளங்களிலோ அல்லது பொதுவெளியிலோ தொடருமானால், அதன் சமகால விளைவுகள் எதுவாக இருக்க முடியும்? தந்தை செல்வாவின் இடத்தில் பிரபாகரனை வைத்து அரசியல் செய்துவந்தவர்களுக்கும்கூட, முன்னவர் தமிழர் அரசியலில் தவிர்க்க முடியாதவராகி விடுகிறார். அதன் மூலம், அவரது அரசியல் வழிமுறைகளும் செயல்முறைகளும்கூட முக்கியத்துவம் பெறும் நிலை தோன்றலாம்.


என்ன, அதற்கான காலம் கனியவேண்டும். அதற்கான பொறுமை, திட்ட செயல்பாட்டாளர்களிடம் இருக்கவேண்டும்.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்

தொடர்புகளுக்கு: 0777 43 5557
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=




# நாதஸ்வரம் என்ற மங்கல ராஜ வாத்யம்

இலங்கையில் சைவத்தமிழ்க் கலாசாரத்தில் மிகவும் புகழ் பெற்ற இசைக் கருவியாக விளங்குவது நாதஸ்வர இசைக்கருவி.

துளைக்கருவி வகையைச் சேர்ந்த ஓர் இசைக் கருவியான இது நாதஸ்வரம், நாதசுரம், நாகசுரம், நாகஸ்வரம், நாயனம் என்று பலவாறு அழைக்கப்படுகிறது.



தமிழர்கள் கொண்டாடும் விழாக்கள் யாவற்றிலும் நாதஸ்வர இசையைக் கேட்கலாம்.

அதிலும் ஈழத்து நாதஸ்வர இசை கலைஞர்களுக்கு தமிழகத்திலும்ஆந்திராவிலும்கேரளாவிலும்கூட முதன்மையும் சிறப்பும் வழங்கப்படுவதும் கவனித்தற்குரியது.

என்.கே.பத்மநாதன், மு. பஞ்சாபிகேசன், அளவெட்டி பாலகிருஷ்ணன், ஆறுமுகம்பிள்ளை, கோவிந்தசாமி, உருத்திராபதி, இணுவில் சிதம்பரநாதன், தட்சணாமூர்த்திப்பிள்ளை, நாச்சிமார் கோயிலடி கணேசன், அளவெட்டி குமரகுரு இணுவில் சின்னராசா, கானமூர்த்தி , பஞ்சமூர்த்தி முதலிய ஈழத்து நாதசுவரக்கலைஞர்கள் உலகப்புகழ் பெற்றவர்களாக விளங்கினர். இன்னமும் இளம் கலைஞர்கள் இத்துறையில் மேதைகளாகத் திகழ்கின்றனர்.

இவர்களில் நல்லூர் கந்தப்பெருமான் பேரில் மிகுந்த பக்தி பூண்ட என்.கே.பத்மநாதனுக்கு 2004 ஆம் ஆண்டிலும் இந்த ஆண்டு நூற்றாண்டு விழாக்கண்ட எம்.பஞ்சாபிகேசனுக்கு 2010 ஆம் ஆண்டிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்திருக்கிறது.

'நாதஸ்வரம்' என்ற சம்ஸ்க்ருதச் சொல்லினால் நாம் வழங்கும் இக்கருவி சிலப்பதிகாரத்தில் அரங்கேற்றக் கதையில் இளங்கோவடிகள் குறிப்பிடும் வங்கியம் என உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் குறிப்பிடுவதும் கவனத்திற்குரியது.

காற்றிசைக்கருவி வகையைச் சார்ந்த 'நாகஸ்வரம்' திறந்த வெளியில் இசைப்பதற்கு மிகவும் ஏற்ற கருவி. நெடுந்தூரம் வரையில் இதன் ஓசையைக் கேட்கலாம்.

இக்கருவி பொதுவாக ஆச்சா மரத்தினால் தமிழக ஊர்களில் அதற்கெனவுள்ள ஆச்சாரிகளால் மிகவும் சிறப்பாகச் செய்யப்படுகிறது.

ஆச்சா மரத்தைவிட ரோஸ்வுட்,பூவரசு,பலாமரம், கருங்காலி, சந்தனம் போன்ற மரங்களாலும் செய்யப்படுகின்றன. இலங்கையில் அராலி ஆச்சாரிகளாலும் நாதஸ்வரம் செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

தற்கால நாதஸ்வரங்கள் செங்கருங்காலி எனப்படும் ஆச்சா மரத்தினால் செய்யப்படுகின்றன.

ஊமத்தம் பூ வடிவில் காட்சியளிக்கும் இந்த நாதஸ்வரம் இரண்டு பகுதிகளைக் கொண்டது.இதன்மேல்பகுதி 'உளவு'அல்லது'உடல்'என்றும்,கீழ்ப்பகுதி'அணைசு' அல்லது 'அணசு' என்றும் அழைக்கப்படும். நாதஸ்வரத்தில் வாசிப்பதற்காக ஏழு விரல் துளைகளைஅமைத்திருப்பர். இதற்கு 'சப்தஸ்வரங்கள்' என்று பெயர். இதில் எட்டாவதாக அமைக்கப்பட்டிருக்கிற துளைக்கு 'பிரம்மசுரம்' என்று பெயர். நாதஸ்வரத்தில் செலுத்தப்படும் கூடுதலான காற்று இதன் வழியாகத்தான் வெளியேறும்.

நாதஸ்வரத்தின் நீளம் பலவாறாக இருக்கும்.

இலங்கையிலும் 1975 வரை திமிரி என்ற இரண்டே கால் அடி நீளமுள்ள நாதஸ்வரமே பயன்படுத்தப்பட்டது.

நீளம் குறைந்த அது ஒலிபெருக்கிகள் இல்லாத அக்காலத்தில் ஏழு கட்டை ஸ்ருதியில் ஒலிப்பிரளயம் செய்தன.

ஆனால், 1975க்குப் பின் ராகங்களுக்கு வசப்படவல்ல பாரி நாதஸ்வரமே அனைவராலும் பயன்படுத்தப்படலாயிற்று.

நாகஸ்வரத்தில் காற்றை உட்செலுத்தி ஊதுவதற்கு உதவுவது 'சீவாளி' (ஜீவஒலி). காவிரிக் கரையில் விளையும் கொருக்கன் புல்லைப் பலவழிகளில் பதனிட்டு சீவாளியைச் செய்வர்.

பொதுவாக இலங்கை மரபில் சுவாமி எழுந்தருளும் போது நாதஸ்வரத்தில் 'கம்பீரநாட்டை'யில் 'மல்லாரி' வாசிக்கப்படும்.

இந்த மல்லாரியை வாசித்தவுடனேயே வெகு தூரத்திலிருப்போரும் கூட திருக்கோயிலில் சுவாமி புறப்பாடு நடைபெறுகின்றதென்பதை அறிந்து கொள்வர்.

அது போல இறைவன் யாகசாலைக்கு வந்ததும் தவிலும், தாளமும் இன்றி நாகசுரத்தில் காப்பி,கானடா,கேதாரகௌளை போன்ற ராகங்கள் வாசிக்கப்படும் மரபு ஈழத்தில் இன்னமும் சிறப்பாகப் பேணப்படுகின்றன.

பிறகு மீண்டும் சுவாமி கோபுரவாசலுக்கு வந்து வெளிவீதி உலா காணும் போது மல்லாரி இசைக்கப்படும். தெற்கு



வீதியில் பல்லவியும் கீர்த்தனைகளும் வாசிக்கப்படும். வடக்கு வீதியில் தவில் கச்சேரி நடந்து பக்தி (சினிமா) பாடல்கள் இசைக்கப்படும். தட்டுச்சுற்று முடிந்ததும் கப்பல் பாட்டுடன் சுவாமி வசந்த மண்டபம் எழுந்தருளுவார். நிறைவாக மங்களம் வாசிக்கப்படும்.

சில திருக்கோயில்களில் இந்த இந்த இடங்களில் இன்ன இன்ன ராகங்களைத்தான் வாசிக்க வேண்டும் என்ற நியதியும் உள்ளது.சிதம்பரம் நடராஜர் திருக்கோயில் திருவிழாவில் பத்துத் தினங்களிலும் அந்தந்த நாட்களில் அந்தந்த ராகங்கள் வாசிக்கப்பட வேண்டும் என்ற முறை இன்றும் இருப்பதாகச் சொல்கிறார்கள்.

நல்லூரில் கூட அத்தகு மரபுகள் செழிப்புறுவதும் ஈசானத்தில் திருவாசகம் வாசிக்கப்படுவதும் கவனத்திற்குரியது.

அந்த வகையில் எமது பெரும் கலை வடிவமான நாதஸ்வர இசை பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும்.

தனித்துவம் பெருமை பெற்ற இத்துறைசார்ந்த கலைஞர்களை ஒழுக்கம், இறை பக்தி கொண்டவர்களாகவும் தீயபழக்க வழக்கங்கள் அற்றவர்களாகவும் ஆரோக்கியசாலிகளாகவும் பாதுகாக்கும் பொறுப்பும் இச்சமூகத்திடம் உண்டு என்பதும் எனது தாழ்மையான எண்ணம்.

அதன் வழி நாதஸ்வரம் என்ற சந்தோஷ வாத்யத்தை எம் மண்ணின் பெருமையாக சொல்லி மகிழ்வோம். கொண்டாடுவோம்.

**ஸ்ரீ சிவஸ்ரீ.தி.மயூரகிரிக்குருக்கள், நீர்வேலி**



## தேர்தலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டு விலக நேரிடும். நாங்கள் இன்னும் மென்மையான விதிமுறைகளைக் கேட்டோம், ஆனால் கிடைக்கவில்லை. இந்த சலுகைகள்மூலம்பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்லும் திறன் நம்மிடம் உள்ளது. ஆனால் இவற்றை மாற்ற முயற்சித்தால் கிடைக்க வேண்டிய பணத்தை இழக்க நேரிடும். பின்னர் நாம் வரிசையில் நிற்கும் யுகத்திற்குச் செல்ல நேரிடும்.

மிகவும் சிரமப்பட்டு நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுத்துள்ளோம்.. நான்நாட்டைப்பொறுப்பேற்ற போது, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 89 பில்லியன் டொலரிலிருந்து 76 பில்லியன் டொலர் வரை குறைந்திருந்தது. இதை மீண்டும் 84 பில்லியன் டொலராகக் கொண்டு வந்துள்ளோம். இரண்டு வருடங்களில் இந்தப் பணியை முடித்தோம். ஏனைய நாடுகளுக்கு இதுபோன்ற நிலையில் இருந்து மீண்டுவர 5 - 10 ஆண்டுகள் ஆனது. நாம் சரியான பொருளாதாரவேலைத்திட்டத்தைமுன்னெடுத்ததால், இந்த வெற்றியைப் பெற முடிந்தது. இதையெல்லாம்தவிர்த்து விட்டு உள்ளூராட்சி மன்ற, மாநகர சபைத் தேர்தல்களை நடத்தியிருந்தால் என்ன நடக்கும் என்று கேட்க விரும்புகிறேன். உள்ளூராட்சித் தேர்தலை நடத்த குறைந்தது இரண்டரை மாதங்கள் தேவைப்படும். அந்த இரண்டரை மாதங்களை நாம் இழந்திருந்தால், இன்று நமது மொத்த உள்நாட்டு உற்பத்தியை 84 பில்லியன்டொலராகஉயர்த்தியிருக்க முடியுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடினோம். உலகின் பல்வேறு நாடுகளுக்குச் சென்று தலைவர்களைச்சந்தித்து கலந்துரையாடினோம். இந்த நேரத்தை உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குப் பயன்படுத்தியிருந்தால்இந்தநாட்டின் பொருளாதாரத்தை மீட்டிருக்க முடியுமா என்று கேட்க வேண்டும். ஒவ்வொருமாதமும்,ஒவ்வொருவாரமும், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணிநேரமும்நாட்டைமுன்னேற்றுவதில் முக்கியமானதாக இருந்தது.

இரண்டு வருடங்களில் உலகில் எந்தநாடும்இத்தகையவெற்றியைப் பெற்றிருக்காது. சர்வதேச சமூகம் எங்களைப்பாராட்டுகிறது. இவ்வாறு பணியாற்றியிருக்காவிட்டால் இந்த நாடு அழிந்திருக்கும்.

ஆனால் எதிர்கட்சிகள் வழக்கு தொடர்ந்தன. 2022இல் பொருளாதாரத்தை இயல்பு நிலைக்குக் கொண்டுவரஏன்அவர்களுக்குஉயர் நீதிமன்றத்திற்கு சென்று வழக்குத் தொடர முடியவில்லை? அதனால் இந்தத் தேர்தலை ஒத்திவைத்ததில் எனக்கு எந்த வருத்தமும் இல்லை. ஆனால் நாட்டில் ஜனாதிபதி தேர்தலையும் பொதுத் தேர்தலையும்ஒத்திவைக்கமுடியாது. அது மக்களின் உரிமை. அந்த வாக்களிக்கும் உரிமையை நான் மதிக்கிறேன். அதேபோல், மக்களின் வாழ்வுரிமையையும்நான் மிகவும் மதிக்கிறேன். எரிவாயு, மருந்து, எரிபொருள் இல்லாமல் மக்கள் வாழ முடியாது. அந்த அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தேன்.

தேர்தலை எப்போது நடத்துவது என்பதை தேர்தல் ஆணையம்தான் முடிவு செய்யவேண்டும் என உயர் நீதிமன்றம் இன்று தெரிவித்துள்ளது. ஜனாதிபதிதேர்தலின்பின்னர்பொதுத் தேர்தலை நடத்துவதற்கு நாம் அனைவரும்தீர்மானித்துள்ளோம். அதற்கான நிதி ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் மாகாண சபை தேர்தல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தல் அவசியம் என்று பலர் கூறுகின்றனர். இதனை நாம் ஏற்றுக்கொள்கிறோம். அதற்குத்தேவையானபணத்தையும் ஒதுக்கவேண்டும்.இதுகுறித்துபுதியசட்டங்களை கொண்டுவர வேண்டும். இளைஞர் பிரதிநிதித்துவம் கொண்டுவரப்படவேண்டும்.இரண்டு வருடங்கள் என்ற குறுகிய காலத்தில் இந்த நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த முடிந்ததையிட்டுநான் மகிழ்ச்சியடைகிறேன். எனவே, நாம் எடுக்கும் முடிவு சரியா தவறா என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும்." என்று தெரிவித்தார்.

## அலிசாஹிர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில்எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம். ஹரிஸை கட்சியின் பிரதித் தலைவர் பதவியில் இருந்து இடைநிறுத்தியதன் பின்னர் என்னைச் சந்திப்பதற்கு அவர் அனுமதி கோரியிருந்தார். நான் அதற்கு அனுமதியளிக்கவில்லை. அவர் மீண்டும் கட்சிக்குத் திரும்ப விரும்புகின்றார்.

அப்படி அவர் வ்தால், தேர்தல் மேடைகளில் ஏறி பரப்புரை செய்ய வேண்டும், பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக மக்களுக்கு பகிரங்கமாக தெளிவுப்படுத்த வேண்டும் என்பதை கட்சி அறிவுறுத்தியிருந்தது.

தனது குறைப்பாட்டை அவர் பகிரங்கமாக ஏற்றுக் கொண்டு சத்தியக்கடதாசி ஒன்றை சமர்ப்பித்துள்ளார். கட்சியின் உச்ச பீடத்துக்கு சத்தியகடதாசியை சமர்ப்பித்து அவரது தரப்பு நியாயங்களும் கேட்கப்படும். கட்சியின் உச்ச பீடமே இறுதித் தீர்மானத்தை எடுக்கும்.

கட்சியின் தீர்மானத்துக்கு அமைய செயற்படுவதை அவர் உறுதிப்படுத்தியுள்ளார். ஆகவே அவருக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவதா இல்லையா என்பதை கட்சியின் உச்ச பீடம் ஆராய்ந்து முடிவெடுக்கும்.

அதேசமயம் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானாவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். பதிலளிப்பதற்கு ஒருவார காலவகாசம் வழங்கியுள்ளோம். அவர் வழங்கும் பதிலை அடிப்படையாகக் கொண்டு அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## தமிழ் பொது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பது இதுவரை தீர்மானிக்கப்படவில்லை. அவசரப்பட வேண்டிய தேவை கிடையாது. வாக்களிப்பு இடம்பெறுவதற்கு ஒருவாரத்துக்கு முன்னர் எமது தீர்மானத்தை அறிவிப்போம்.

ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்குமாறு ஒரு தரப்பினர் குறிப்பிடுவதை தமிழ் மக்கள் ஏற்க போவதில்லை. இவர்கள் ஒவ்வொரு தேர்தல்களின் போதும் தேர்தலைப் புறக்கணிக்குமாறு தெரிவிப்பார்கள். ஆனால் மக்கள் அந்தக்கோரிக்கையைஏற்றதில்லை. இம்முறையும் மக்கள் தேர்தலைப் புறக்கணிக்கப் போவதில்லை.

தமிழ் பொதுவேட்பாளருக்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்கவில்லை. அவர் எங்களின் கட்சி உறுப்பினர். அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடடிக்கையை முன்னெடுத்துள்ளோம். இதனுடாக எமது நிலைப்பாட்டை விளங்கிக் கொள்ளவேண்டும்.

கடந்த கால தேர்தல்களிலும் எமது நிலைப்பாட்டை இறுதி தருணத்திலேயே அறிவித்திருந்தோம். அதற்கமைய 80 சதவீதமானோர் எமது தீர்மானத்துக்கு அமையவே வாக்களித்தார்கள். ஆகவே இம்முறையும் நாங்கள் குறிப்பிடும் வேட்பாளருக்கே எம் மக்கள் வாக்களிப்பார்கள் என்றார்.

## அரியநேந்திரனுக்கே.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரசுக் கட்சி என்ன முடிவை எப்போது எடுத்தாலும் தனிப்பட்ட முறையில் எனது ஆதரவு அரியநேத்திரனுக்கு கிடைக்கும். கட்சி முடிவை எடுக்கிறதோ எடுக்கவில்லையோ அல்லது எடுக்கும் முடிவு மக்களிடமிருந்து எவ்வளவு தூரம் எம்மைத் தள்ளப்போகவைக்கிறதுஎன்பதைத் தமிழ் மக்கள் தீர்மானிப்பார்கள் - என்றார்.

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வயது 78.

இரண்டுநாட்களுக்கு முன்னர் திடீர் சுகவீனமுற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த அவர், நேற்றிரவு மாரடைப்பால் உயிரிழந்தார் என்று புத்தளம் வைத்தியசாலை பொலிஸார் தெரிவித்தனர்.

அன்னாரின் ஜனாஸா இன்று புத்தளம் பகா முஸ்லிம் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.






# பாடசாலை அதிபர் ஏறாவூரில் கைது

## ஆபாசப்பட விவகாரத்தில்

தரம் 5 ஆம் ஆண்டில் கல்வி கற்றுவரும் மாணவர்களுக்கு கையடக்க தொலைபேசியில் ஆபாச படங்களைகாட்டிவந்த57வயதுடைய பாடசாலை அதிபர் ஒருவரை புதன்கிழமை இரவு கைது செய்துள்ளதாகஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ்பிரிவிலுள்ள ஆரம்ப பாடசாலை ஒன்றில் தரம் 5 ஆம் ஆண்டில் 3 ஆண் மாணவர்களும், 3 பெண் மாணவர்களுமாக 6 பேர் கல்விகற்று வருகின்றனர்.

குறித்த மாணவர்கள் 5 ஆம் ஆண்டு புலமைபரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள நிலையில் அந்த மாணவர்களுக்கு பாடசாலை முடிவுற்ற பின்னர் மேலதிகமாக மாலையில் அதிபர் கற்பித்து வந்துள்ளார்.

இதன்போது அதிபர் மாணவர் களுக்கு தனது கையடக்க தொலைபேசியில் இருந்து ஆபாச படங்களைகாட்டிவந்துள்ளார். இந்நிலையில், ஒரு மாணவி மாலை நேர வகுப்பிற்கு போகமுடியாது என பெற்றோரிடம் தெரிவித்த நிலையில் அதற்கான காரணத்தை கேட்டபோது மாணவி அதிபரின் இந்த ஈனச் செயல் தொடர்பாக தெரிவித்துள்ளார்.

இதனை தொடர்ந்து சம்பவதினமான புதன் இரவு பெற்றோர் 119 ஆம் பொலிஸ் அவசர இலக்கத்திற்கு அறிவித்ததையடுத்து, பொலிஸார் பாதிக்கப்பட்ட 3 மாணவிகளான சிறுமிகளிடம் இருந்துவாக்குமூலத்தைபதிவு செய்ததுடன் 57 வயதுடைய அதிபரை கைது செய்தனர்.

இதில்கைது செய்யப்பட்ட அதிபரை விசாரணையின் பின்னர்நீதிமன்றில்ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பெண்கள் சிறுவர்கள் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.(05)

# அ'புரம் - கெக்கிராவ வீதியில் விபத்து

## தாயும் மகனும் காயம்



அநுராதபுரம் - கெக்கிராவ வீதியில் புதன்கிழமை இடம்பெற்ற விபத்தில்தாயும்மகனும்காயமடைந்துள்ளனர்.

தனியார் பஸ் ஒன்று மோட்டார் சைக்கிள் ஒன்றின் பின்புறத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது, மோட்டார் சைக்கிளில் பயணித்த தாயும் மகனும் காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# ஜனநாயக ஐக்கிய முன்னணி புத்தளம் தொகுதி பிரதான அமைப்பாளராக றபாத் அமீன் நியமனம்



(சியாஜ்)

ஐக்கிய தேசிய கட்சியின் வலய அமைப்பாளரும் ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்க பண்டாரவின் முஸ்லிம் விவகாரங்களுக்கான செயலாளருமான றபாத் அமீன் ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து விடை பெற்று வடமேல் மாகாண ஆளுநர் ஹாபிஸ் நசீர் அஹமடின் கட்சியான ஜனநாயக ஐக்கிய முன்னணியில் இணைந்து கொள்ள உள்ளதுடன் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் வடமேல் மாகாணத்தில் ஜனநாயக ஐக்கிய முன்னணியின் சார்பாக போட்டியிட உள்ளதாக றபாத் அமீன் தெரிவித்தார்.

இவர் கடந்த வாரம் வடமேல் மாகாண ஆளுநரின் புத்தளம் மாவட்ட ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.(05)

# முஸ்லிம் காங்கிரஸின் பாலமுனைபிரதேச அமைப்பாளர் அலியார் இடை நிறுத்தம்

(நூருல் ஹுதா உமர்)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட செயற்குழுக் கூட்டத்தின் பின்னர் இடம்பெற்ற கைகலப்பு சம்பவத்துடன் தொடர்புடைய கட்சியின் பாலமுனை பிரதேச அமைப்பாளர் ஏ.எல்.எம். அலியார், கட்சியின் மாவட்ட செயற்குழு மற்றும் உயர்பீட உறுப்பினர் பதவிகளில் இருந்து இரு வார காலத்திற்கு இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்று கட்சியின் செயலாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் அறிவித்துள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட செயற்குழுக் கூட்டம் கடந்த 11 ஆம் திகதி அட்டாளைச்சேனை மீனோடைக்கட்டு சக்கி மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டம் நிறைவுற்று தலைவர் மண்டபத்தில் இருந்து வெளியேறிய பின்னர் கட்சியின் இரு தரப்பினரிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறி குழப்பகரமான சூழல் ஏற்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரிப்பதற்காக கட்சியின் தவிசாளர் ஏ. எல். அப்துல் மஜீத், பிரதித் தலைவர் சட்டத்தரணி எஸ்.எம்.ஏ. கபூர் மற்றும் பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர் ஆகியோர் அடங்கிய குழுவொன்றை கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் உடனடியாக நியமித்திருந்தார்.

கட்சியின் தவிசாளர் ஏ. எல். அப்துல் மஜீத், பிரதித் தலைவர் சட்டத்தரணி எஸ்.எம்.ஏ. கபூர் ஆகிய இருவரும் கூட்டம் நிறைவடைந்ததை தொடர்ந்து நெரிசல் காரணமாக ஏனையோர் மண்டபத்தில் இருந்து வெளியேறும் வரை காத்திருந்த வேளையில் அப்போது மண்டபத்திற்குள் நடந்த விடயங்களை நேரடியாக அவதானித்திருந்தனர். அதற்கு மேலதிகமாக சம்பவத்தின் பின்னணி குறித்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதன் அடிப்படையில் தலைமையிடம் இக்குழு முன்வைத்த பரிந்துரைக்கு அமைவாக தலைவரின் அறிவுறுத்தலின் பேரில் கட்சியின் பாலமுனை பிரதேச அமைப்பாளர் ஏ.எல்.எம். அலியார், இரண்டு வார காலத்திற்கு கட்சியின் மாவட்ட செயற்குழு மற்றும் உயர்பீட உறுப்பினர் பதவிகளில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்த பட்டிருப்பதாக கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் அறிவித்துள்ளார்.(05)

# வாழைச்சேனை ஆயிஷாவில் மாணவர் சந்தை நிகழ்வு





(எச்.எம்.எம்.பர்ஸான்)

வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தில் மாணவர் சந்தை நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்றது.


ஆரம்பப் பிரிவு பாடத்திட்டத்திற்கமைய இந்தமாணவர்சந்தை பாடசாலை அதிபர் என். சஹாப்தீன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

இந்நிகழ்வில், அதிதிகளாக வாழைச் சேனைஅந்நூர்தேசிய பாடசாலை அதிபர் எம்.பீ.எம்.அன்வர், பாடசாலை அபிவி ருத்தி சங்க செயலா ளர் மௌலவி எம்.ஐ. எம். நவாஸ் ஸலாமி, பாடசாலை ஆசிரி யர்கள், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதில்,மாணவிகள் அனைத்து விதமான வியாபாரப் பொருள் களையும் காட்சிப்படுத்தியதுடன், விற்பனை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

(05)

# கொத்துவேலி கவிதை நூல் அறிமுக விழா



(அபு அலா)

கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை '76சி' நண்பர்கள் வட்டத் தினதும் கல்முனை வடக்கு கலாசாரப் பேரவையினதும் ஏற்பாட்டில் கிழக்கு மாகாண மீன்பிடி பணிப்பாளர் சி.சுதாகரன்(நீலையூர்சுதா)அவர்களின் 'கொத்துவேலி' கவிதை நூல் அறிமுக விழாநாளை(சனிக்கிழமை)கல்முனை இராமகிருஷ்ண மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

உவெஸ்லி உயர்தரப் பாடசாலையின் முன்னாள் அதிபர் வடிவேல்பிரபாகரன்தலைமைஇடம்பெற வுள்ள இந்நூல் அறிமுக விழாவுக்கு மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் உதவிபொதுமுகாமையாளர் சுவாமி சுரார்ச்சிதானந்தர் ஆன்மீக அதிதியாகவும், மேலதிக மாகாணப் பணிப்பாளரும்மட்டக்களப்பு பிராந்தியசுகாதாரசேவைகள் பணிப்பாளருமாகிய கவிஞரும்எழுத்தாளருமான வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரன் முதன்மை அதிதியாகவும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ அதிதிகளாக அம்பாறை மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளர் எஸ்.ஜெகராஜன், பிரதேச செயலாளர்களான ரி.அதிசயராஜ், திருமதி எஸ்.ராகுலநாயகி, ரி.கஜேந்திரன், ஆர்.திரவியராஜ், என்.நவநீதராஜா, எஸ்.எல்.எம்.ஹனீபா ஆகியோருடன் பிராந்திய திட்டமிடல் வைத்திய அதிகாரிகள், சட்டத்தரணிகள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள்என பலரும்கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.(05)

# அரசியலுக்காக பொய் சொல்லி மக்களை ஏமாற்ற வேண்டிய தேவை எனக்கில்லை

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் தௌபீக் எம்.பி கருத்து

(அபு அலா)

எமது நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்து எழுந்து கொள்ள முடியாத ஒரு காலகட்டத்தில் மிக முக்கியமான ஜனாதிபதி தேர்தல் ஒன்றை எதிர்நோக்கியிருக்கிறோம். அரசியல் வரலாற்றில் அதிகளவான வேட்பாளர் போட்டியிடும் ஓர் தேர்தலாக இது காணப்படுவதுடன் வழமைக்கு மாறாக பலத்த போட்டியும் ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. இத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் ஊழல், மோசடியற்றவரும், மக்கள் செல்வாக்கைப் பெற்ற ஒரு தலைவராக சஜித் பிரேமதாஸ மாத்திரமே காணப்படுகிறார் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில் -

இனம், மதம் மற்றும் மொழி வேறுபாட்டுகளைப் பார்த்து வாக்களிக்கக் கூடிய தேர்தலல்ல இத்தேர்தல். நாம் அனைவரும் நாட்டு நலனை மையப்படுத்திய சிந்திக்க வேண்டும். அப்போதுதான் நாம் எம் இலக்குகளை அடையலாம். மூவின மக்களும் சந்தோசமாக - நிம்மதியாக - வாழக்கூடிய நாட்டை உருவாக்குவதே இப்போதைய தேவையாக இருக்கிறது. இதனை நாட்டு மக்களும் அறிந்துள்ளார்கள். அதனை ஏற்படுத்துவதற்கான ஒரு தலைமையை உருவாக்குவதற்கான தேர்தலாகவே இத்தேர்தலை நாம் பார்க்கவேண்டியிருக்கிறது. அந்த தலைமைக்கு தகுதியானவர் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ என்பதை முழு நாடும் அறிந்துள்ளது.

தற்போது நாட்டில் எரிபொருள் வரிசை, எரிவாயு வரிசை இல்லாமல் போனாலும் நாடு இன்னும் பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடையவில்லை. எரிபொருள், எரிவாயு, மின்சாரம், நீர்கட்டணம் மற்றும் உணவுப் பொருள்களின் விலைகள் இன்னும் பழைய நிலைக்கு முழுமையாக வரவில்லை. அனைத்து கட்சிகளும் இணைந்தே சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடன் நாட்டில் வரிசையுகத்தை இல்லாமல் செய்தோம். இதற்கு தனிப்பட்ட எவரும் உரிமைகொள்ள முடியாது என்பதை எமது மக்கள் நன்கு அறிவார்கள்.



எமக்கு இப்போது தேவை சர்வேசத்தில் நன்மதிப்பை பெற்ற, ஊழல் இல்லாத ஒரு ஜனாதிபதியே. அதற்கு தகுதியானவர் சஜித் பிரமதாஸ மாத்திரம்தான். சர்வதேச நாடுகளும் அவரது அரசாங்கத்திற்கு உதவுவதற்கு தயாராக இருப்பதாகவும் அரசியலுக்கு பொய் சொல்லி மக்களை ஏமாற்ற வேண்டிய எந்த தேவையும் எனக்கில்லை எனவும் தெரிவித்தார்.(05)

# சிறுவர் காப்பகத்திலிருந்து நான்கு சிறுவர்கள் மாயம்

## வெல்லவாயவில் சம்பவம்

வெல்லவாய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள சிறுவர் காப்பகம் ஒன்றிலிருந்த நான்கு சிறுவர்கள் காணாமல் போயுள்ளனர் என வெல்லவாய பொலிஸார் தெரிவித்தனர்.

16,14 மற்றும் 15 வயதுடைய நான்கு சிறுவர்களே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

இந்தநான்குசிறுவர்களும்யாரிடமும் சொல்லாமல் சிறுவர் காப்பகத்திலிருந்து வெளியேசென்றுள்ளனர்எனப்பொலிஸ் விசாரணையில்தெரியவந்துள்ளது.(05)

# ஒரு கிலோ கஞ்சாவுடன் கிராண்ட்பாஸில் கைது

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட கொழும்பு 14 பிரதேசத்தில் ஒரு கிலோ கிராம் கஞ்சாவுடன் இளைஞன் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படை யினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராஜகிரிய பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

(05)

# சட்டப்பூர்வமான வெளிநாட்டுப் பயணம் தெளிவூட்டல் தொடர்பான செயலமர்வு





(ஹஸ்பர் ஏ.எச்)

இணையவழி பாலின அடிப்படையிலான வன்முறையைத் தடுத்தல் மற்றும் சட்டபூர்வ வெளிநாட்டுப் பயணம் குறித்த தெளிவூட்டல் தொடர்பான செயலமர்லு திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் புதன்கிழமை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது சமூகவலைப்பின்னல்பயன்பாட்டின்



வரம்புகள் மற்றும் பாதுகாப்புகள், டிஜிற்றல் சாதனங்களின்பயன்பாடுமற்றும்பாதுகாப்பு, இணைய பரிவர்த்தனைகள் மற்றும் பாதுகாப்பான பயன்பாடு, குற்றவியல் விசாரணை மற்றும் தொடர்புடைய சட்டம், உதவக்கூடிய நிறுவனங்கள் போன்ற விடயங்கள் வளவாளர்களால் தெளிவூட்டப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வெளிநாடு செல்வதற்கு முன் தெரிந்து கொள்ள வேண்டிய விடயங்கள், தேவையான ஆவணங்கள், உரிய நாட்டின் வேலைவாய்ப்பு தொடர்பான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள், முகவர்களின் சட்டபூர்வமான உண்மைத்தன்மை, ஆயுள்காப்புறுதி, விசா தொடர்பான பிரச்சிஞீனைகளை தவிர்த்தல், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்தல், கடல் வழியாக பயணம் செய்வதால் எதிர் கொள்ள வேண்டிய பிரச்சினைகள், சட்ட விரோதமாக வெளிநாடு செல்வதால் எதிர்கொள்ள வேண்டியவை, எதிர்கொள்ள நேரிடும் தண்டனைகள், மனித கடத்தல், மனித வியாபாரம், மனித கடத்தலுக்கும் மனித வியாபாரத்திற்கும் இடையிலுள்ள வேறுபாடுகள், 1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டம், 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டம், வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்வதன் மூலம் கிடைக்க பெறும் நன்மைகள், உதவி வழங்கும் நிறுவனங்கள் போன்ற விடயங்கள் இதன்போது மாவட்ட அரசாங்க அதிபரால் தெளிவூட்டப்பட்டது.

இதன்போது மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன், திருகோணமலை மாவட்ட செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் தீபானி அபயசேகர, துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)

# ஹெரோயினுடன் ஒருவர் கல்கிசையில் கைது

கல்கிசை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இரத்மலானை பிரதேசத்தில் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவர் கல்கிசை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரால் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்கிசை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரத்மலானை பிரதேசத்தை சேர்ந்த 54 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 05 கிராம் 120 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கைது செய்யப் பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக கல்கிசை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிசை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# லக்கலையில் கற்குவாரியில் தவறி விழுந்து ஒருவர் இறப்பு

மாத்தளை, லக்கலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தலகொய்ஆர பிரதேசத்தில் புதன்கிழமை கற்குவாரியில் தவறி விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளார் என லக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

கற்குவாரியில் பணியாற்றும் மாத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் தம்புள்ளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை லக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பதுளை - ஸ்பிரிங்வெளி வீதியில் பஸ் விபத்து



பதுளை - ஸ்பிரிங்வெளி வீதியில் வீரியபுர பிரதேசத்தில் பதுளை இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்றின் பின்பகுதியில் உள்ள சக்கரம் ஒன்று நீங்கி விபத்துக்குள்ளாகி உள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான பஸ், பெத்தேகமவில் இருந்து ஸ்பிரிங்வெளி ஊடாக பதுளை நோக்கி சென்று கொண்டு இருக்கும் போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான பஸ்ஸில் சுமார் 80 பேர் வரை பயணித்துள்ளனர் எனவும் எவருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும் பொலிஸார்



தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பதுளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# போதைப் பொருள்களுடன் மின்சார சபை ஊழியர் கைது

கிராண்ட்பாஸ் மற்றும் மட்டக்குளி ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் போதைப்பொருள்களுடன் மின்சார சபை ஊழியர் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு ஒருகொடவத்தை , வத்தளை மற்றும் கதிரானவத்தை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 23 முதல் 40 வயதுடைய ஐந்து நபர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, முச்சக்கரவண்டியில் போதைப்பொருள் விற்பனை செய்து கொண்டிருந்த மின்சார சபை ஊழியர் உட்பட இருவர் மட்டக்குளி பிரதேசத்தில் உள்ள பல்பொருள் விற்பனை நிலையம் ஒன்றிற்கு அருகில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மட்டக்குளி கதிரானவத்தை மற்றும் கிராண்ட்பாஸ் ஆகிய பிரதேசங்களில் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருளுடன் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்களின் மொத்த மதிப்பு 18 லட்சம் ரூபா என பொலிஸார் தெரிவித்தனர். (05)

# சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகள் மீது சட்ட நடவடிக்கை

## கொழும்பில் அதிரடி

சுகாதார சீர்கேட்டுடன் இயங்கியதாகக் கூறப்படும் உணவகம் ஒன்றிற்கு எதிராக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் புதன்கிழமை வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

கொழும்பு நகரத்தில் உள்ள தோசை விற்பனை செய்யும் உணவகம் ஒன்றிற்கு எதிராகவே இவ்வாறு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த உணவகத்தில் பணிபுரிபவர்கள் மேலாடை இன்றி சுகாதார சீர்கேட்டுடன் தோசைகளைத் தயாரித்துள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய பல்வேறு உணவகங்களுக்கு எதிராக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

அதன்படி, மனித பாவனைக்கு உதவாத பழுதடைந்த உணவுப் பொருட்களைப் பயன்படுத்தி உணவுகளைத் தயாரித்தல், உணவுகளில் பூச்சிகள் காணப்படல், அசுத்தமான முறையில் உணவு தயாரித்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் இராஜகிரிய மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் உள்ள 06 உணவகங்களுக்கு எதிராக பொதுச் சுகாதார பரிசோதகர்களால் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (05)

# ஒட்டமாவடி பாலைநகரில் யுவதியின் சடலம் மீட்பு

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட ஓட்டமாவடி - பாலைநகர் பகுதியில் நேற்று (வியாழக்கிழமை) காலை யுவதி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த யுவதி தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார் என பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

யுவதியின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப் பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை 771 முறைப்பாடுகள்

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை (ஜூலை மாதம் 31ஆம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி வரை) 771 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 388 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 359 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஒரு முறைப்பாடும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 23 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. (05)

# வாக்காளர் அட்டை விநியோகம் செப்டெம்பர் 3 தொடங்குகிறது

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகம் செப்டெம்பர் 03 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என பிரதி தபால் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வாக்காளர் அட்டைகள் விநியோகிப்பதற்கான விசேட தினமாக செப்ரெம்பர் 08 (ஞாயிற்றுக்கிழமை) குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (05)




# சிறப்பாக நடந்த ஆதிசிவன் ஆலய மகா கும்பாபிஷேகம்









காரைதீவுஅருள்மிகுஸ்ரீஆதிசிவன்ஆலய நவகுண்டபட்ஷமகாகும்பாபிஷேகபெருஞ்சாந்தி பெருவிழாநேற்று(வியாழக்கிழமை)பிரதமகுரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற போது.....
படங்கள். வி.ரி. சகாதேவராஜா




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.08.2024இல் வெளியிடப்பெற்றது